[1986 நவம்பர் 14

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரூரைப் பொதுத் தொகுதியாக மாற்றல்

2—(*வினா எண் 9644) திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அரூர் தனித் தொகுதியாக உள்ளதை மாற்றி பொதுத் தொகுதி ஆக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் அரூர் தொகுதி நீண்ட நெடுங் காலமாகவே பொதுத் தொகுதியாக இல்லாமல் ஒரு ரிசர்வ் தொகுதியாக இருந்து வருகிறது. இந்தத் தொகுதியைப் பொதுத் தொகுதியாக வரும் 1989 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்னால் அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் இரண்டாவது அட்டவணையின் அடிப்படையில் மாநிலத்திற்கு மாநிலம் நாடாளுமன்ற உறுப் பினர்களுடைய தொகுதிகளின் எண்ணிக்கையும், சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளுடைய எண்ணிக்கையும் வகுக்கப் படுகின்றன. மக்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்தியா முழுவதும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய தொகுதிகள் வகுக்கப்படுகின்றன. அதற்கு ஏற்ப மாநிலத்திற்கு மாநிலம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளின் கீழே எத்தனை சட்டமன்றத் தொகுதிகள் இருப்பது என்பதைப் பற்றி மாநிலமே முடிவு செய்து, மத்திய அரசும் தேர்தல் கமிஷனும் ஒப்புக் கொள்கிற அளவுக்கு முடிவு செய்யப்படுகின்றன. தமிழகத்தைப் பொறுத்த வரையில் 234 சட்டமன்றத் தொகுதிகள் இருக் கின்றன. அதில் 42 தொகுதிகள் ஆதி திராவிடர் வகுப்பிற்கும்

1986 நவம்பர் 14]

3 தொகுதிகள் பழங்குடியினர்களுக்கும் என்று வகுக்கப் பட்டிருக்கின்றன. அதனுடைய தொகுதி அமைப்புகள் என்பது 1972 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட சீரமைப்புக் குழுவினால் (Delimitation Commission) முடிவு செய்யப்பட்ட தாகும். 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை (Delimitation Commission) என்கிற சீரமைப்புக் குழு இதனை முடிவு செய்ய வேண்டும் என்ற ரிதியில் கி.பி. 2001 ஆம் ஆண்டு எடுக்கப்பட இருக்கிற சென்சஸ் எண்ணிக்கையை வைத்துத்தான் இனிமேல் இந்த எல்லை மாற்றம் செய்யப்பட வேண்டும் என்று மத்திய அரசு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 170-வது பிரிவின் அடிப் படையில் ஒரு தடை ஆணையைப் பிறப்பித்திருக்கிறது.

ஆகவே, இப்போதிருக்கிற தொகுதியின் எல்லையைப் பொறுத்த வரையில் பிரித்து அமைப்பதற்கான வாய்ப்பு வசதி கள் இப்போது எந்த வகையிலும் இல்லை. மத்திய அரசு அதற்கு மறுபடியும் ஒரு சட்டம் கொண்டு வந்து தடை ஆணையை நீக்கினால்தான் அது முடியும். என்றாலும் கூட தேர்தல் கமிஷன் மத்திய அரசுக்குக் கடிதம் ஒன்று எழுதியிருக்கிறது. அதாவது 1981 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக் கெடுப்புக்கு ஒப்ப நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப் பினர்களின் தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்காமல் அவற்றின் எல்லையை மாற்றுவதற்கு மத்திய அரசு அனுமதி அளிக்கலாம் என்றும், தனித் தொகுதியாக இருப்பதைப்பொதுத் தொகுதியாக மாற்றுகிற அளவுக்கும் மற்றும் பொதுத் தொகுதி யாக இருப்பதைத் தனித் தொகுதியாக மாற்றுகிற அளவுக்கும் எல்லையைப் பொறுத்த வரை மாற்றம் செய்யலாம் என்றும் அதற்கு மத்திய அரசு தடை ஆணையை நீக்கி ஓரளவிற்கு உத்தரவிடவேண்டும் என்றும் அதற்கு ஏற்றபடி அரசியலமைப்புச் சட்டத்திற்கும் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்றும் தேர்தல் கமிஷன் மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறது. இந்தக் கருத்தை மத்திய அரசு ஏற்றுக் கொண்டு, அரசியலமைப்பு சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வந்தால், அதற்குப் பிறகு தான் தனித் தொகுதியைப் பொதுத் தொகுதியாகவோ அல்லது பொதுத் தொகுதியைத் தனித் தொகுதியாகவோ ஆக்க முடியும். அது இல்லாதவரை கி.பி. 2001 ஆம் ஆண்டு வரை பொதுத் தொகுதி பொதுத் தொகுதியாகவும், தனித் தொகுதி தனித் தொகுதியாகவும்தான் இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 3 மற்றும் 4 மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக் கிணங்க ஒத்தி வைக்கப்பெறுகின்றன.